# இராமலிங்க வள்ளலாரின் சமரச சன்மார்கக் கீர்த்தனைகளும் வேதநாயகரின் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளும்

(பேராசிரியர் முனைவர் மார்கரெட் பாஸ்டின்)

19ஆம் நூற்றாண்டில் அவதரித்த வள்ளல் பெருமான் '**சமரச சன்மார்கம்**' என்ற ஒன்றினை வாழ்வாக்க விரும்பினார். அவரின் சமகாலத்தில் வாழ்ந்த வேதநாயகம் பிள்ளை அவர்கள் வள்ளலாரின் பாடல்களில் மனதைப் பறிகொடுத்தவர். இவர் வள்ளலாரை அடியொற்றி **'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை'** இயற்றி வள்ளலாரின் முன் பாடி அரங்கேற்றியுள்ளதை அறிகின்றோம். தமிழ்ப்புலமையும் இசைப்புலமையும் இனிய குரல்வளமும் இருவரும் பெற்றிருந்தனர். இருவரும் இருவேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் இருவேறு அறத்தை வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். இருவரும் ஞான மார்கம் என்ற இறுதி நிலையை அடைந்தவர்கள் என்பதை அவர்களது வாழ்க்கை முறையும், பாடல்களும் உறுதி செய்கின்றன. ஞானநிலையின் காரணமாகவே காணுகின்ற ஒவ்வொருவருள்ளும் ஒளிவடிவான இறைவனைக் கண்டனர், வாடியவர்களைக் காணச் சகியாது வருந்தினர், விரைந்தோடி உதவினர். விளைவு **'அன்பு, அன்பு மட்டுமே.'** பயிர்களிடம், உயிர்களிடம், தேவையில் உள்ளோரிடம் என **அன்பு அருளாகி** வழிந்தோடியது. இந்த அன்புக்கு முன் **இனம், மதம், ஜாதி** என்ற எந்த வேறுபாடுகளுக்கும் இடமின்றி **'சமரசம்'** மட்டுமே மேலோங்கி நிற்பதைக் காண்கின்றோம். அடுத்தத் தலைமுறையினரும் பயனுறும் வகையில் இதனைப் பாடல்களாக இயற்றி அளித்திருப்பது நாம் பெற்ற பெரும்பேறு. கர்நாடக இசை உலகில் இவ்விருவரது பாடல்களும் இடம் பெறுவதிலிருந்தே நம்மை அறியாமல் நமக்குள் இவர்களது வாழ்வின் தாக்கங்கள் ஊடுருவுவதை நம்மால் மறுக்க முடியாது.